# அறிக்கை

## இலங்கையில் 1983-2009 காலப்பகுதியில் ஏற்பட்ட ஆயுத மோதல்இ அரசியல் அமைதியின்மை அல்லது உள்நாட்டு குழப்பங்கள் போன்றவற்றின் விளைவாக உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் நினைவுச் சின்னமொன்றை அமைப்பதற்கான நிபுணர்கள் குழு

**2024 மே 31**

# குழுவின் அமைப்பு

| | | |
|---|---|---|
| 1. | **பேராசிரியர் எமரிட்டஸ் ஜகத் வீரசிங்க** | தலைவர் |
| 2. | **பேராசிரியர் சந்திரகுப்தா தேனுவர**<br>வரலாறு மற்றும் கலை கோட்பாடு பேராசிரியர்இ கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் | உறுப்பினர் |
| 3. | **பேராசிரியர் ஃபர்ஸானா எஃப் ஹனீபா**<br>சமூகவியல் பேராசிரியர்இ கலைப்பீடம்இ கொழும்பு பல்கலைக்கழகம் | உறுப்பினர் |
| 4. | **பேராசிரியர் ரி.சனாதனன்**<br>தலைவர்இ நுண்கலைத் துறைஇ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | உறுப்பினர் |
| 5. | **திருவதி எஸ்.ஏ.ரி.எஸ்.சூரியாராச்சி**<br>பதில் பணிப்பாளர் நாயகம்இ தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம் | உறுப்பினர் |
| 6. | **திரு மஹிந்த விதானாராச்சி**<br>மேலதிக பணிப்பாளர் நாயகம்இ நகர அபிவிருத்தி அதிகாரசபை | உறுப்பினர் |

**இலங்கையில் 1983 - 2009 காலப்பகுதியில் இடம்பெற்ற ஆயுத மோதல்கள், அரசியல் அமைதியின்மை மற்றும் உள்நாட்டு கலவரங்கள் காரணமாக உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் நினைவுச்சின்னமொன்றை அமைப்பதற்கான நிபுணர்கள் குழுவின் அறிக்கை**

நிபுணர்கள் குழு - பேராசிரியர் ஜகத் வீரசிங்க (தலைவர்), பேராசிரியர் சந்திரகுப்த தேனுவர, பேராசிரியர் தா. சனாதனன், பேராசிரியர் ∴பர்சானா எப். ஹனிபா, ழுரேசு - பணிப்பாளர் நாயகம் திரு. தீப்தி லமஹேவா, பின்னர், ழுரேசு பதில் பணிப்பாளர் நாயகம் திருமதி. துஷாரி சூரியாராச்சி மற்றும் ருனுயு மேலதிக பணிப்பாளர் நாயகம் திரு. மஹிந்த விதனாராச்சி ஆகியோர் மேலுள்ள குழுவுக்கு 2023 ஓகஸ்ட் மாதத்தில் நியமிக்கப்பட்டிருந்தனர். இக்குழு பின்வருவனவற்றை பணி இலக்காகக் கொண்டிருந்தது:

1. இலங்கையில் 1983-2009 காலப்பகுதியில் ஆயுத மோதல்கள், அரசியல் அமைதியின்மை அல்லது உள்நாட்டு குழப்பங்கள் ஆகியவற்றின் விளைவாக உயிர்நீத்த பொதுமக்கள், ஆயுதப்படை வீரர்கள், பொலிசார் மற்றும் முன்னாள் போராளிகள் உள்ளடங்கலாக அனைவரையும் நினைவுகூரும் வகையில், மனதிற்கு ஆறுதலளிக்கும், நல்லிணக்கத்தின் அடையாளமொன்றாக, கொழும்பில் பொருத்தமான இடத்தில் அமைக்கப்பட வேண்டிய நினைவுச்சின்னத்தை நிருமாணிப்பதற்காக திட்டமிடுதல், வடிவமைத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

2. இத்தகைய நினைவுச்சின்னம், பாதிக்கப்பட்டவர்களின் உரிமையை வெளிக்கொண்டுவரும், ஆதரவைப் பெறும் வகையிலும், மோதல்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதற்கான கூட்டு அர்ப்பணிப்பை வளர்த்து, அனைத்து இலங்கையர்களிடையேயும் இனவாதத்தை ஆற்றுப்படுத்தி, நல்லிணக்கத்தை மேம்படுத்தும் வகையிலும் திட்டமிடப்பட்டு, வடிவமைக்கப்படுதல்.

தேசிய நினைவுச்சின்னம் ஒன்றை நிறுவும் முன்மொழிவொன்றினூடாக நாட்டில் நல்லிணக்கத்தை முன்னெடுத்துச் செல்வதிலுள்ள சனாதிபதியின் அக்கறையை நாம் பாராட்டுகின்றோம். போர் நிறைவடைந்து ஒன்றரை தசாப்தங்கள் நிறைவடைந்த நிலையில், பொது மக்கள், ஆயுதப் படைவீரர்கள், பொலிசார் மற்றும் ஆயுத மோதலில் உயிரிழந்த முன்னாள் போராளிகள் உள்ளடங்கலாக அனைவரையும் நினைவுகூரும் வகையில் மனதிற்கு ஆறுதலளிக்கின்ற, நல்லிணக்கத்தின் அடையாளமாக நினைவுச்சின்னம் ஒன்றை அமைப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக குழுவால் இனங்காணப்பட்டுள்ளது. கடினமான கடந்த காலத்திலிருந்து மீண்டு வருவதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பையும், அதேபோன்று பன்முகத்தன்மையும், சகவாழ்வையும் கொண்ட எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கான அபிலாஷையையும் சுட்டிக்காட்டுவதான திட்டத்தை பொக்கிஷமாகக் குழு பார்க்கிறது.

மேலேயுள்ள செயன்முறைக்கான எமது முறையியலானது, சனாதிபதியின் அலுவலகத்தின் சுருக்கவுரையில் உள்ளடக்கப்பட்ட “பாதிக்கப்பட்ட நபர்களின் உரிமையையும் ஆதரவையும் பெறுதல்” என்ற வார்த்தைகளை முன்னிறுத்தியுள்ளது. நாம் வடக்கு, கிழக்கு மற்றும் குருநாகல் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட சமூகங்களையும், சிவில் சமூக உறுப்பினர்களையும் கலந்தாலோசித்துள்ளதுடன், நல்லிணக்கம் மற்றும் நினைவேந்தல் துறையிலுள்ள நிபுணர்களையும் சந்தித்தோம். எமது கலந்தாலோசனையில் அனைத்து இனக்குழுக்களும் பிரதிநிதித்துவம் செய்திருந்தன, எனினும் பெரும்பாலும் அனைத்து கருத்துக்களும் முழுமையாக கவனத்திலெடுக்கப்படவில்லை. பின்வரும் அறிக்கை எமது கண்டறிதல்கள் மற்றும் பரிந்துரைகளின் சுருக்கமாகும்.



குறிப்பு: தமிழ் மொழிப் பதிப்பானது, தகவல் நோக்கங்களுக்கு மாத்திரமேயான ஆங்கில மொழியிலுள்ள மூல ஆவணத்தின் மொழி பெயர்ப்பாகும். ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், ஆங்கில மூல உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**மோதலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலும் இராணுவத்தினரின் குடும்பங்களுக்கு மத்தியிலும் தற்போதும் யுத்தம் தொடர்ந்துகொண்டிருப்பது கலந்துரையாடல்களில் தெளிவாகியது.** வடுக்கள் நிரந்தரமாகியுள்ளன. வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள பெரும்பாலான சமுதாயங்களின் மத்தியில், குறிப்பாக நினைவேந்தலுக்கு எதிரான தடை காரணமாக, அரசாங்கத்தின் மீது அவநம்பிக்கையும், அச்சமும் காணப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்கில், தெற்கு சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களுக்கு இடையில் ஒரு பெரிய மற்றும் தெளிவான அதிகார வேறுபாடு இருப்பது தெளிவாகத் தெரிவதுடன், போரின் போது வடக்கு எவ்வாறு பாதிக்கப்பட்டது என்பது குறித்து தெற்கில் போதுமான மதிப்பீடு காணப்படவில்லை என்று வடக்கிலுள்ள மக்கள் உணர்வதாகத் தெரிகின்றது. வடக்கு, கிழக்கிலுள்ள மக்கள் தற்போதும் தெற்கைப் பற்றிப் பேசுகையில் போர்க்காலத்தில் வளர்த்தெடுக்கப்பட்ட முற்றிலும் எதிரான வார்த்தைப் பிரயோகங்களையே பயன்படுத்துகின்றனர்.

**திருகோணமலை மற்றும் குருநாகலிலுள்ள முன்னாள் இராணுவத்தினர், தமிழீழ விடுதலைப் புலிகளின் (டுவுவுடு) செயற்பாடுகளை இராணுவச் செயற்பாட்டின் அதே மட்டத்தில் வைப்பது அவர்களது செயற்பாட்டை சட்டப்பூர்வமானதொன்றாக ஆக்கிவிடுமென்று தெரிவித்து, தமிழீழ விடுதலைப் புலிகளை நினைவுகூருவதற்கு மறுக்கின்றனர்.** வடக்கிலுள்ள பொது மக்கள் குழுக்கள் தங்களின் அன்புக்குரியவர்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டவர்கள் என்று தாம் கருதுகின்ற இராணுவத்திருடன் தாம் இழந்தவர்கள் நினைவுகூரப்படுவதை நிராகரிக்கின்றனர். நாம் கலந்தாலோசித்த நிபுணர்களும், எந்த நினைவுச்சின்னத்தையும் நிருமாணிப்பதற்கு இராணுவத்தினரின் உழைப்பு பயன்படுத்தப்படவில்லை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு பரிந்துரைத்தனர்.

**நாம் விஜயம் மேற்கொண்ட ஒவ்வொரு மாவட்டத்தின் சமுதாயங்கிடையிலும் பல வேறுபாடுகளை நாம் எதிர்கொண்டதுடன், அவற்றின் தனித்தன்மையையும் அறிந்துகொண்டோம்.** 1990 ஆம் ஆண்டில் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் சமுதாயத்தினரால், நினைவேந்தல் முயற்சியாக வரலாற்றை எழுதுவதற்கான அழைப்பு விடுக்கப்பட்டது. முள்ளிவாய்க்காலில் நினைவுத் தூபி அமைப்பது குறித்து ஆலோசித்த போது, சில இடங்கள் உயிர்நீத்த விடுதலைப் புலிகளின் நினைவிடமாக மட்டுமே அமையும் என்றும், உயிரிழந்த ஏனையவர்களுக்கு அத்தகைய இடங்களில் முன்னுரிமையளிக்கப்படமாட்டதென்றும், அதனால் நினைவுச் சின்னங்களை அமைக்கின்ற இடங்களை கண்டறிவது முக்கியமானதென்றும் குறிப்பிடப்பட்டது. கிழக்கில் போரினால் ஏற்பட்ட இனப் பதட்டங்கள் தொடர்ந்தும் மறையாது காணப்படுவதுடன், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு கூட்டங்களில் அவற்றுக்கான கவனம் கோரப்பட்டது.

**அனைத்து சமூகங்களின் பிரதிநிதிகளும் அரசால் கைவிடப்பட்டுள்ளதாக வெவ்வேறு அளவில் உணர்கின்றனர்.** வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் சமுதாயங்களின் பிரதிநிதிகள், முரண்பாட்டிலிரந்து விலகிச்செல்ல தமக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்றும் நினைவேந்தல் செய்வதிலிருந்து தடுக்கப்படுவதோடு, காணாமல் போனோர் தொடர்பில் தீர்க்கப்படாத கேள்விகளுக்கு மேலதிகமாக, அவர்கள் இராணுவம் மற்றும் பொலிஸாரால் தொடர்ந்து கண்காணிப்பு மற்றும் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்றும் கவலைதெரிவித்தனர். இதற்குமேலதிகமாக, நில அபகரிப்பு, பௌத்த சமுதாயங்கள் இல்லாத இடங்களில் பௌத்த தூபிகள், புத்தர் சிலைகளை நிருமாணித்தல் மற்றும் இராணுவத்தால் அமைக்கப்பட்ட கோலாகலமான வெற்றி நினைவுச்சின்னங்கள் ஆகியவை வடக்கு, கிழக்கில் இராணுவத்தின் தொடர்ச்சியான ஆக்கிரமிப்பாகவும், தெற்கு சிங்கள காலனித்துவத்தின் பகுதியாகவும் பார்க்கப்படுகின்றன. தெற்கு சிங்கள உணர்வில் இருந்து வெளிப்படுகின்ற மத்திய அரசின் முன்னெடுப்புகள் வடக்கு, கிழக்கிலுள்ள மக்களை ஓரங்கட்டுவதாகவும், நல்லிணக்கம் தொடர்பான அரசாங்கத்தின் சொல்லாடலுக்கு



குறிப்பு: தமிழ் மொழிப் பதிப்பானது, தகவல் நோக்கங்களுக்கு மாத்திரமேயான ஆங்கில மொழியிலுள்ள மூல ஆவணத்தின் மொழி பெயர்ப்பாகும். ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், ஆங்கில மூல உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

முரண்பட்டதாகவும் பார்க்கப்படுகிறது. நல்லிணக்கச் செயற்பாடுகளை நிறுவதற்கு அரசாங்கம் ஏற்கனவே முன்னெடுத்த பல முயற்சிகளான- நல்லிணக்கப் பொறிமுறைகள் பற்றிய ஆலோசனைச் செயற்குழு மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் ஆகியவை குறிப்பிடப்பட்ட நேர்மையற்ற செயற்பாடுகளாகக் கருதப்படுகின்றன. இந்த இரண்டு படிமுறைகளும் முக்கியமானவை என்றபோதிலும், அவற்றின் நடைமுறைப்படுத்தலுக்க போதிய ஆதரவு இன்மை மற்றும் அவற்றின் பணிக்கு தெளிவான அரசாங்க ஆதரவு இல்லாமைஇ இந்த முயற்சிகள் ஏனைய இடங்களில் உள்ளவர்களை நோக்கியதாகவும், பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பிரச்சனைகளை நிவர்த்தி செய்வதில் சிறிதும் தொடர்பற்றவையாக விளங்குவதாகவும் குறிப்பிடப்பட்டது. இவற்றின் அடிப்படையில் நல்லிணக்கத்தை நினைவுகூருவது தொடர்பான அரசாங்கத்தின் நேர்மையானது தொடர்ந்தும் சவாலுக்குள்ளாக்கப்பட்டது. நீதி மற்றும் பொறுப்புக்கூறல் இல்லாத நல்லிணக்கம் என்பது ஆதிக்கத்தின் தொடர்ச்சியே என்றும் எம்மிடம் தெரிவிக்கப்பட்டது

**சிங்கள இராணுவக் குடும்பங்கள், நீண்ட காலமாக மதிப்பளிக்கப்பட்ட தாம் அரசினால் அண்மைக்காலத்தில் கைவிடப்பட்டுவிட்டதாக உணர்வதுடன், பெற்றோர்கள் தமது பிள்ளைகளை இழந்ததில் அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்ததுடன், முன்னாள் இராணுவத்தினர் தமது இளமை, குடும்ப வாழ்க்கை மற்றும் ஆரோக்கியத்தை மோதலுக்காக இழந்ததை எண்ணி வருத்தப்பட்டனர்.** பதிலளித்தவர்கள் அனைவரும், அரசு பங்கேற்கும் எந்தவொரு நல்லிணக்க முயற்சியும் நிச்சயமாக அரசியல்வாதிகளிடமிருந்து பிரித்து வைக்கப்படுதல் வேண்டும் என்று கருத்து தெரிவித்திருந்தனர்.

அரச நினைவுச்சின்னம் பற்றி பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்கள் தொடர்பான எமது பிரதான காண்டறிதல்களை பின்வருமாறு சுருக்கமாக தெரிவிக்கமுடியும்.

**மக்கள் நினைவேந்தல் நடத்துவதை இராணுவமும் பொலிசாரும் தடுக்கின்ற சூழ்நிலையில், நினைவேந்தல் நடவடிக்கைகளுக்காக நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்படும் சூழ்நிலையில், தேசிய நினைவுகூரல் ∴ நினைவுச்சின்னம் பற்றி பேசுவது மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருந்ததுடன், அரசாங்கம் தவறாக வழிநடத்துவதாகவும், வெறுப்பூட்டுவதாகவும் கருதப்பட்டது.** தேசிய நினைவுச் சின்னம் குறித்த யோசனையில் வடக்கு, கிழக்கு மக்கள் விரக்தியையும், கோபத்தையும், அவநம்பிக்கையையும் வெளிப்படுத்தியிருந்தனர். இறந்தவர்களை நினைவுகூரவும், கொண்டாடவும் முற்படும்போதெல்லாம் மக்கள் பொலிசாரிடமிருந்தும், இராணுவத்தினரிடமிருந்து தொடர்ந்து அழுத்தத்தை எதிர்கொள்கின்றனர். பல குடும்பங்கள் இழந்த தமது அன்புக்குரியவர்களின் முக்கிய நினைவுச் சின்னங்களாக கருதிய விடுதலைப் புலிகளின் மாவீர்ர் துயிலும் இல்லங்களையும் போர் முடிவுக்கு வந்த உடனேயே இராணுவம் அழித்தொழித்துவிட்டது. இராணுவத்தினர் அந்த இடங்களில் முகாம்கள், வாகனம் திருத்துமிடங்கள் மற்றும் கழிவறைகளை கட்டியுள்ளதோடு ஒரு சந்தர்ப்பத்தில் புதைகுழியில் விவசாயம் செய்து அந்த நிலத்திலிருந்து விளைந்த பொருட்களை மக்களுக்கு உணவாக வழங்குவதற்கும் முயன்றுள்ளனர். இத்தகைய செயற்பாடுகளை தமிழ் மக்கள் மீதான தாக்குதலாகவும், அரச காழ்ப்புணர்ச்சியின் அறிகுறியாகவும் மக்கள் பார்க்கின்றனர். எனவே அரசாங்கத்தின் நல்ல நோக்கத்தில் அவர்களுக்கு சிறிதும் நம்பிக்கை இல்லை. தேசிய நினைவுச்சின்னம் பற்றிய முன்முயற்சியானது மக்களை தவறாக வழிநடத்தும் முயற்சிக்கு மேலுமொரு சான்றாகவே பார்க்கப்பட்டது. மக்கள் தமது சொந்த முயற்சியில், தமது சொந்த இடங்களில் நினைவுகூர்வதற்கு முதலில அனுமதிக்கப்படுதல் வேண்டும் என்கின்றனர். தற்போது நினைவேந்தலில் ஈடுபட்டுள்ள நபர்கள் மீது பொது ஒழுங்கு தொடர்பான தவறான குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்குத் தொடரும் நிலை காணப்படுகின்றது. வடக்கில் நடைபெற்ற பல கூட்டங்களில் அழிக்கப்பட்ட மாவீரர்களின் துயிலுமில்லங்களை புனரமைக்குமாறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டது. புனர்வாழ்வளிக்கப்பட்ட



குறிப்பு: தமிழ் மொழிப் பதிப்பானது, தகவல் நோக்கங்களுக்கு மாத்திரமேயான ஆங்கில மொழியிலுள்ள மூல ஆவணத்தின் மொழி பெயர்ப்பாகும். ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், ஆங்கில மூல உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

முன்னாள் போராளிகள், அதிகாரிகளின் தினசரி கண்காணிப்புக்கும் அன்றாட வாழ்வில் அடிக்கடி குறுக்கீடுகளை எதிர்கொள்கின்றனர். அவர்கள் அத்தகைய நினைவுச்சின்னத்தை பார்வையிடுவதற்கு கொழும்புக்கு செல்வதற்கு கூட அனுமதிக்கப் படுவார்களா என்றும், பயங்கரவாத தடைச்சட்டம் (ீவுயு) தற்போது நடைமுறையில் இருக்கும் பட்சத்தில் தமக்கு அனுமதி வழங்கப்படுமா என்றும் ஆச்சரியப்பட்டனர். நிகழ்நிலைப் பாதுகாப்பு சட்டத்தினூடாக கருத்துச் சுதந்திரத்திற்கு கட்டுப்பாடுகள் அதிகரித்துவருகின்ற இச்சூழலில், மற்றும் பயங்கரவாத தடைச்சட்டம் (ீவுயு) காணப்படுகையில், கொழும்பிலுள்ள ஒரு நினைவுத் தூபியில் உண்மையில் என்ன இருக்கப்போகின்றதென்று பங்கேற்பாளர்கள் குழப்பமடைந்துள்ளனர். அரசாங்கம் மாறும்போது நினைவுகூரலின் எந்த விதிகள் நிலைத்திருக்கும் என்பதிலும் அவர்கள் அக்கறை கொண்டிருந்தனர். நினைவுகூரல் சட்டபூர்வமாக உறுதி செய்யப்படுதல் வேண்டும் என்றும் ஆலோசனையொன்று முன்வைக்கப்பட்டது. மக்கள் நினைவைக் கொண்டாடவும் நினைவுகூருவதற்குமான உரிமையை பாதுகாப்பதற்கு விசேட சட்டமென்று காணப்படுதல் வேண்டுமென்றும் சிலர் தெரிவித்திருந்தனர். (தற்போது 2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இழப்பீடுகளுக்கான அலுவலகச் சட்டத்தில் நினைவுகூரலுக்கான உரிமை அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதைக் குழு கவனத்திற் கொள்கிறது).

**ஏழ்மையான பின்னணியைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்கள் பலர் ஏற்கனவே பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். பொருளாதார நெருக்கடி இத்தகைய இடர்களை அதிகப்படுத்தியுள்ளது. இத்தகைய தருணத்தில் நினைவுச்சின்னமொன்றை முன்மொழிந்துள்ள அரசாங்கம் இந்த நெருக்கடியான நேரத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் நிலை குறித்து எந்த அக்கறையையும் காட்டியிருக்கவில்லை என்று உணரப்பட்டது.** போரில் கணவனை இழந்த அல்லது கணவர் அல்லது சகோதரர்கள் காணாமல் போன பெண்களை நாம் சந்தித்திருந்தோம், பிள்ளைகள் காணாமல்போன ஆண்களையும், பெண்களையும் நாம் சந்தித்திருந்தோம், பெரும்பாலும் அனைவரும், அன்புக்குரியவர்களின் இழப்பின் அதிர்ச்சிக்கு மேலதிகமாக, கடுமையான பொருளாதார கஸ்டங்களை அனுபவித்து வருகின்றனர். வறுமை காரணமாகப் பாதிக்கப்பட்ட நபர்கள், குறிப்பாகப் பெண் தலைமைத்துவ குடும்பத் தலைவர்கள் தங்களைத் தாங்களே காயப்படுத்திக் கொள்கின்றார்கள் என்று எமக்குத் தெரிவிக்கப்பட்டது. ''மின்சாரப் பட்டியலைச் செலுத்த முடியாது பெண்கள் தற்கொலை செய்து கொள்கின்றனர்''. அம்பாறை மாவட்டத்திலுள்ள சில தொலைதூரக் கிராமங்களில் மக்கள் அரசாங்கத்துடன் மிகவும் குறைவான தொடர்புகளையே கொண்டிருந்ததுடன், போரின் போதும், அதற்குப் பின்னரும் கூட அவர்களுக்கு ஆதரவு கிடைத்திருக்கவில்லை. 1990 காலப்பகுகளில் ஏற்பட்ட இழப்பிற்காக அரசாங்கத்திடமிருந்து தவணை இழப்பீடொன்று கிடைக்கபெற்றதாகவும், அதன் பின்னர் எவ்வித உதவியும் கிடைக்கவில்லை என்றும் அவர்கள் தெரிவித்திருந்தனர். இந்த மக்களுக்கு, நினைவுச்சின்னமொன்றின் பயன் பற்றி யோசிப்பதற்கே கடினமாக இருந்தது. இத்தகைய நினைவுச்சின்னங்கள் பயனுள்ள கட்டுமான வடிவில் அதாவது, வீடுகள், கழிவறைகள் எனத் தாம் இழந்த அன்புக்குரியவர்களின் பெயரில் இருத்தல் வேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டனர். நினைவுச்சின்னம் பயனுள்ளதாக இருக்க வேண்டும் என்றால் அது சமூகத்திற்கு சேவை செய்வதாக காணப்படுதல் வேண்டும் என்று அவர்கள் வாதிட்டனர். இழந்த மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களுடன் பாதிக்கப்பட்ட நபர்கள் எதிர்கொள்ளும் பல சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு அரசால் எந்த விதத்திலும் தீர்வு காணப்படவில்லை என்பது இந்த சந்திப்புகளில் தெரியவந்தது. ஏனைய விளிம்புநிலைப் பகுதிகளில் சில முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. இந்த மக்களின் சமூக மற்றும் பொருளாதார நல்வாழ்வை நோக்கி நிலையான முறையில் அரசு நிதியை வழங்குதல் வேண்டும். அன்றாடம் மோசமடைந்து வரும் பொருளாதார நெருக்கடியின்



குறிப்பு: தமிழ் மொழிப் பதிப்பானது, தகவல் நோக்கங்களுக்கு மாத்திரமேயான ஆங்கில மொழியிலுள்ள மூல ஆவணத்தின் மொழி பெயர்ப்பாகும். ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், ஆங்கில மூல உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

போது நினைவுச்சின்னம் கட்டுவது பொருளாதார முன்னுரிமையான விடமொன்றல்ல என்பதை மக்கள் மிகத் தெளிவாக வெளிப்படுத்தியிருந்தனர். வடக்கு, கிழக்கிலுள்ள குடும்பங்கள் பொருளாதார நெருக்கடியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், அதிக மன அழுத்தத்திற்கும் உள்ளாகியுள்ளனர். படையினர்களின் குடும்பங்கள் தொடர்ந்து பெற்றுவருகிற சம்பளம் மற்றும் ஓய்வூதியம் காரணமாகப் பொருளாதார ரீதியில் குறைந்தளவிலேயே பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை, பெற்றோர்கள் தமது பிள்ளைகளை இழந்தமை தொடர்பில் வருத்தத்தையும், மனக்கசப்பையும் வெளிப்படுத்தியதுடன், யுத்தத்தினால் தமது இளமையையும், ஆரோக்கியத்தையும் இழந்தமை பற்றி முன்னாள் படையினர் குறிப்பிட்டனர்.

**மூன்று தசாப்த கால யுத்தத்தின் விளைவுகளையும், பதட்ட நிலைமைகளையும் தீர்ப்பதற்கு இதுவரை போதுமானளவு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. தேசிய நினைவுச்சின்னத்தின் மூலம் மேலும் ஆறுதல்படுத்துவதற்கு ஏதுவாக தேசிய மட்டத்திலோ அல்லது சமுதாய மட்டத்திலோ பகைமைக்கெதிரான தீர்மானம் ஏதுவும் இல்லை.** வடக்கு, கிழக்கில் தொடரும் இராணுவ பிரசன்னத்தினால் கசப்புணர்வு காணப்படுகின்றது. அத்துடன், அரசு வடக்கு மற்றும் கிழக்கு மக்களை இரண்டாம் தர பிரசைளாக நடத்துவதாக விவரிக்கப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில், கூட்டான தேசிய நினைவேந்தல் சின்னம் தற்போது சாத்தியமில்லை. மட்டக்களப்பு ஆலோசனையில், நல்லிணக்கம் மற்றும் நினைவிடத்திற்கான அரசின் முயற்சிகள் நேர்மையானவை அல்ல என்றும் தெரிவிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டு நல்லிணக்கப் பொறிமுறைகள் தொடர்பான ஆலோசனை செயலணியின் அறிக்கையை சனாதிபதி பெற்றக்கொள்ளவில்லை என்று அவர்கள் சுட்டிக் காட்டியிருந்தனர். சில வருடங்களுக்கு ஒருமுறை இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் களநிலபரத்தில் தொட்டுணரும்படியான எந்த பலாபலன்களும் அற்றுஇ புத்திஜீவிகளின் நேரத்தை அரசாங்கம் வீணடிப்பதாக அவர்கள் குறிப்பிட்டனர். உதாரணமாக காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் போன்ற நிறுவனங்கள் அமைக்கப்பட்ட போது, அவர்களுக்கு ஆதரவளிப்பதற்கும், அவர்கள் வெற்றியடைவதை உறுதிப்படுத்துவதற்கும் அரசாங்கம் சிறிதளவிலேயே உதவியிருந்தது. யுத்தத்தின் போது துருவப்படுத்தப்பட்ட பல்வேறு சமுதாயங்கள் ஒருவருக்கொருவர் அருகருகே வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட கிழக்கில், பதட்டங்கள் தொடர்ந்தும் நீடிக்கின்றன. மட்டக்களப்பில், தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கு இடையில் அவ்வப்போது வெடித்த போர்க்காலப் பகைமை ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களினால் உக்கிரமடைந்தது. திருகோணமலையில், தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் பதட்டமான சமாதானம் பேணப்படுவதிலுள்ள சிரமங்கள், பழைய பகைகளை அகற்றுகின்ற நினைவுச்சின்ன முயற்சியில் பங்கேற்பாளர்களின் அக்கறையின் மூலம் எமக்கு வெளிப்படுத்தப் பட்டது. 1990 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்டு, தற்போது திரும்பி வந்துள்ள வடக்கு முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தமது இடம்பெயர்ந்த கதைகள் மௌனிக்கப்பட்டுள்ளதை எடுத்துக்காட்டியதுடன் நினைவுகூரலின் ஒரு வழிமுறையாக வரலாற்றை எழுதுதல் இருத்தல் வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

**பாதிக்கப்பட்ட பெரும்பாலான மக்கள் கொழும்பில் தேசிய நினைவுச்சின்னம் ஒன்று பற்றிய யோசனையில் அதிகம் அக்கறை காட்டவில்லைஇ அதை நிராகரித்தபோதிலும், அரச அனுசரனையுடன் கூடிய உள்ளூர் நினைவுகூரல் மற்றும் சமுதாய அளவிலான முயற்சிகளின் சாத்தியக்கூறுகளில் அவர்களுக்கு ஆர்வம் இருந்தது.** பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள அனைத்து சமுதாயங்களும் கொழும்பில் ஒரு நினைவுச்சின்னம் அமைக்கும் யோசனையை முற்றிலுமாக நிராகரித்தன. கொழும்பிலுள்ள நினைவுச்சின்னமொன்றை அணுகுவதிலுள்ள சிரமங்கள் மற்றும் இடத்துடன் பரிச்சயமின்மை காரணமாக அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படமாட்டார்கள் என்று அவர்கள் உணர்கின்றனர். கொழும்பில் நினைவுச்சின்னமொன்று நிருமாணிக்கப்படுமானால், அது



குறிப்பு: தமிழ் மொழிப் பதிப்பானது, தகவல் நோக்கங்களுக்கு மாத்திரமேயான ஆங்கில மொழியிலுள்ள மூல ஆவணத்தின் மொழி பெயர்ப்பாகும். ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், ஆங்கில மூல உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை யதார்த்தங்களிலிருந்து துண்டிக்கப்பட்டு வெளியில் இருப்பவர்களுக்கு மட்டுமே அர்த்தமுள்ள ஒரு அடையாள குறியீடாக விளங்கும். ”மக்கள் புகைப்படம் எடுப்பதற்கு இது மற்றொரு சுற்றுலாத் தளமாக விளங்கும்''. “நீங்கள் அதைச் செய்யலாம், ஆனால் அதில் எங்களை ஈடுபடுத்த வேண்டாம்” என்றும் கூட எமக்குத்தெரிவிக்கப்பட்டது. கொழும்பில் ஒரு நினைவுச்சின்னமொன்றை நிருமாணிப்பதன் மூலம், பாதிக்கப்பட்ட பகுதிகளில் நினைவுச்சின்னங்கள் இனி தேவையில்லை என்று அரசு கூறுகின்றது என்று சிலர் நினைத்தனர்.

**பாதிக்கப்பட்ட சமுதாயங்களுக்கு அருகாமையில் நினைவுச்சின்னங்களை அமைப்பது தொடர்பாகப் பல மாற்று ஆலோசனைகள் காணப்பட்டன.** சில பகுதிகளில், மாவட்ட அளவிலான நினைவுச்சின்னம் போதுமானதாக்க் கருதப்பட்டது. ஏனைய பகுதிகளில், குறிப்பிடத்தக்க நிகழ்வுகளை நினைவுகூரும் வகையில் நினைவுச்சின்னங்கள் இருத்தல் வேண்டும் என்ற பரிந்துரைகள் காணப்பட்டன. அறந்தலாவை மற்றும் கோனகல படுகொலைகள் ஏற்கனவே நினைவுச்சின்னங்களைக் கொண்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. காத்தான்குடி படுகொலை சேதமடைந்த கட்டிடத்தைப் பாதுகாப்பதன் மூலம் நினைவு கூரப்படுகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு தற்போது எந்த அடையாளங்களும் இல்லை. மாவட்டத்தின் முக்கிய நகரத்திற்கு குறிப்பிடத்தக்க தூரத்திலுள்ள பகுதிகளில், மக்களுக்கு அருகாமையிலுள்ள கிராமங்களில் நினைவுச்சின்னங்களை அமைப்பதற்கு எடுத்துரைக்கப்பட்டது. ஏனையவர்கள் நாளாந்த நினைவுகூரல் செயற்பாடுகளின் அங்கமொன்றாக மாறுவதற்காக தமது வீடுகளுக்கு அருகில் அவற்றை விரும்பினர்.

**எவ்வாறாயினும், காணாமல் போனவர்களின் குடும்பங்கள், இறந்தவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற நினைவேந்தலால் அனைத்தையும் மூடிவிட விரும்பவில்லை.** அவர்கள் தமது அன்புக்குரியவர்களின் அவலநிலை பற்றிய தகவல்களை அறிய விரும்புகின்றார்கள். மட்டக்களப்பு ஆலோசனைக் கூட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் பிரதிநிதிகள் நினைவுச் சின்னங்களை அமைக்கும் அரச முயற்சிக்கு ஆதரவாக இருக்கவில்லை. இழந்த தமது அன்புக்குரியவர்ளைப் பற்றி அரசு வழங்கும் தகவல்களே அவர்களுக்கு முக்கியமாகப்பட்டது. வடக்கு, கிழக்கு ஆகிய இரு பகுதிகளிலும் 2009 ஆம் ஆண்டு இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்கள் பற்றிய விடயம் முன்வைக்கப்பட்டது. கூட்டு நினைவேந்தல் சாத்தியப்படுவதற்கு முன்பு இதுபோன்ற நிகழ்வுகளுக்கு அரசு பொறுப்புக் கூறவேண்டியுள்ளதாக எம்மிடம் தெரிவிக்கப்பட்டது.

**தற்போது கருத்துருவாக்கப்பட்டுள்ள தேசிய நினைவுச்சின்னம், போரின் பின் கைவிடப்பட்ட மாற்றுத்திறனாளிகளின் பெரும் எண்ணிக்கையிலான மக்களை வெளிப்படுத்தவில்லை.** இந்த நினைவுச் சின்னம் போரின் விளைவாக ஊனமுற்றோரை எவ்வாறு பிரதிநிதித்துவப்படுத்தும் மற்றும் கருத்து தெரிவிக்கும்? போரின் விளைவாக பல நபர்கள் ஊனமுற்றுள்ளனர் என்பதுடன், இறந்தவர்களை நினைவுகூரும் நினைவுச்சின்னத்திற்கும் அவர்களின் குறிப்பிட்ட அனுபவத்திற்கும் எதுவித சம்பந்தமும் இருக்காது. நினைவுச்சின்னம் அவர்களின் அனுபவத்தையும் போரின் விளைவாக ஏற்பட்ட அவர்களின் வாழ்க்கை மாற்றத்தையும் எவ்வாறு நிவர்த்தி செய்யும்? இந்தக் கேள்விகள் மாற்றுத்திறனாளிகளின் பிரதிநிதிகளால் எழுப்பப்பட்டன.

**படைவீரர்களின் குடும்பங்கள் “நினைவுச்சின்னம் பற்றிய சோர்வினால்” துயருற்றுள்ளனர். பல தசாப்தங்களாக அரச ஆதரவின் பின்னர் தாம் அண்மையில் புறக்கணிக்கப் பட்டமையால் அதிருப்தியடைந்த ”ரணவிரு” சமுதாயமும், அவர்களது குடும்பங்களும் இத்திட்டத்தின் மீது**



குறிப்பு: தமிழ் மொழிப் பதிப்பானது, தகவல் நோக்கங்களுக்கு மாத்திரமேயான ஆங்கில மொழியிலுள்ள மூல ஆவணத்தின் மொழி பெயர்ப்பாகும். ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், ஆங்கில மூல உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**சந்தேகம் கொண்டுள்ளனர்.** அவர்களின் இழப்பை நினைவுகூர கட்டாயப்படுத்தும் பற்பல நினைவுச்சின்னங்கள் உள்ளன என்ற அபிப்பிராயத்தை அவர்கள் கொண்டிருந்தனர். இந்த நினைவுச் சின்னங்களில் சில மூர்க்கத்தனமான புறக்கணிப்புக்கு உட்பட்டன. இச்சமுதாயம் இம் முன்மொழிவில் சந்தேகம் கொண்டுள்ளது, இதனால் எதனைச் சாதிக்க முடியும் என்பதில் தெளிவற்றதாக இவர்கள் இருப்பதுடன் அரசியல் நோக்கங்களுக்காக இக்குழுவே கையாளப்படக்கூடும் எனக் குறிப்பிடப்பட்டது, இறுதியில் தேசிய நினைவுச்சின்னமொன்றை நிருமாணிப்பதற்கு அவர்கள் இணங்கியிருந்தனர், ஆனால் அத்தகைய திட்டத்துடன் தனிப்பட்ட முறையில் எதுவும் செய்ய விரும்பவில்லை.

**மேற்கூறிய கண்டறிதல்களிலிருந்து, வரலாற்றுப் பகைமைகள், நிலவும் பதட்டங்கள், யுத்தம் மற்றும் அதன் பின்விளைவுகள் காரணமாக மக்கள் எதிர்கொண்டுள்ள சிரமங்களைத் தீர்ப்பதற்கு தேசிய மற்றும் உள்;ர் மட்டத்தில் இன்னும் நிறையவே ஆற்றவேண்டியுள்ளது என்று குழு முடிவுக்கு வந்துள்ளது. சனாதிபதி அலுவலகத்தின் சுருக்கவுரையில் எதிர்பார்க்கப்படுகின்ற வகையிலான தேசிய நினைவுச்சின்னத்தை நிருமாணிப்பது என்பது, அடுத்த ஐந்து ஆண்டுகளில் மக்களின் தற்போதைய கவலைகள் தீர்க்கப்பட்டதன் பின்னர் சாத்தியமாகும்.** எனவே தேசிய ஆறுதல்படுத்தலுக்கான நினைவுச்சின்னத்தை செயற்படுத்துவதற்கு கடந்த காலத்தைப் பற்றிய பொதுவான புரிதலைக் கொண்டுவருவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளாகக் குழு பின்வருவனவற்றைப் பரிந்துரைக்கின்றது.



குறிப்பு: தமிழ் மொழிப் பதிப்பானது, தகவல் நோக்கங்களுக்கு மாத்திரமேயான ஆங்கில மொழியிலுள்ள மூல ஆவணத்தின் மொழி பெயர்ப்பாகும். ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், ஆங்கில மூல உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

குழுவின் பரிந்துரைகள்

1. **இலங்கையில் 26 ஆண்டுகால யுத்தம் மற்றும் மோதலுடன் தொடர்புபட்டதான கலை மற்றும் கலாச்சார வெளிப்பாடுகளின் களஞ்சியமாக செயல்படுவதற்கான வழிபாட்டுக்குரிய கட்டிடமொன்றை நிருமாணிப்பதற்கு குழு பரிந்துரைக்கின்றது.** மோதலுக்கான அனைத்து தரப்பினரிடமிருந்தும் மோதல் காலப்பகுதியில் உருவாக்கப்பட்ட கலை மற்றும் பிரச்சார சாதனங்களை சேகரிக்கப்பட வேண்டும் என்பதுடன், அவை இக்காலத்துக்கேற்ப செயப்படத்தக்க உணர்வுபூர்வமான வகையில தகவல்களை வழங்க ஏற்றதாக ஒழுங்குபடுத்தப்படவேண்டுமென்று குழு கருதுகின்றது. அத்தகைய தகவல்சார் ஆவணங்கள் தெற்கில் உள்ள தேசியவாத குழுக்கள், சமாதானத்தை கட்டியெழுப்ப உழைப்பவர்கள், தமிழீழ விடுதலைப் புலிகள் (டுவுவுநு) மற்றும் புலிகளின் அனுதாபிகள், வடக்கில் புலிகளை எதிர்ப்பவர்கள் போன்றோரின் தகவல்களை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். அத்தகைய பொருட்களைச் சேகரிப்பது மற்றும் அவற்றை எடுத்தாளுகை செய்வது அரசாங்கத்தின் ஆதரவுடன், அவ்வாறு செய்ய ஆற்றல்களைக் கொண்டுள்ள பல்வேறு அமைப்புகளால் நாடு முழுவதும் வெவ்வேறு இடங்களில் செய்யப்பட முடியும்.

2. மோதலின் முழுக்காலப்பகுதியிலும், பல்வேறு குழுக்களும் தனிநபர்களும் வெவ்வேறு வழிகளில் நினைவேந்தல் மற்றும் நல்லிணக்கம் பற்றிய வினாவில் ஈடுபடு கொண்டிருக்கின்றனர். இதில் தற்போதைய இக்குழுவின் உறுப்பினர்களின் படைப்புகளும் உள்ளடக்குவதுடன் சிறந்த படைப்புகளின் தொகுதியையும் உருவாக்குகிறது -இது நினைவுச்சின்னம் அமைக்கும் படிமுறையின் ஓர் அங்கமாக அமையவேண்டும்- இது மத்திய இடமொன்றில் பொதுமக்களுக்கு கிடைக்கும்படியானதாக அமையவேண்டும். **நாட்டின் கடினமான கடந்த காலத்தைப் பதிவுசெய்யும், கருத்து தெரிவிக்கும் அன்றேல் ஈடுபடுகாட்டும் தற்போதுள்ள கலாச்சார படைப்புகளின் கப்பகமாக இது கட்டாயம் இருக்கவேண்டும்.**

3. **யுத்தம் முடிவடைந்த பின்னர் முதல் பத்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட நல்லிணக்க முயற்சிகளும் பாரிய வேலைத் திரட்டாகும். அதுவும் அரசாங்கத்தால் தெரிவு செய்யப்பட்ட இடத்தில் ஒன்றுதிரட்டப்படுக் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.**

4. வடக்கு, கிழக்கில் சமுதாய மட்டத்தில் நல்லிணக்கம், ஆறுதல்படுத்துதல் மற்றும் நினைவேந்தல் முயற்சிகள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன, அவை அரசாங்கத்தின் குறைந்தபட்ச தலையீட்டுடன் ஊக்குவிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் ஆதரிக்கப்படுதல் வேண்டும். எமது காண்டறிதல்கள், மக்கள் நாளாந்த அடிப்படையில் நினைகூரல் செயற்பாடுகளில் ஈடுபடுவதையும், சமூகக் குழுக்கள் சமுதாயநிலையிலான ஆறுதல்படுத்தல் பணிகளை மேற்கொள்வதனையும் எடுத்துக்காட்டுகின்றன. பாதிக்கப்பட்ட நபர்களின் உரிமையையும், ஆதரவையும் பெறுவதற்கும் சமுதாய நிலை ஆறுதல்படுத்தலை அடைவதற்குமான எந்த நினைவுச்சின்னங்களும் மக்களின் அன்றாட தேவைகளை கருத்தில் கொள்ளுதல் வேண்டும். **குழுமங்கள் ஆதரவுக்காக விண்ணப்பிக்கக் கூடிய சமூக நினைவேந்தல் நிதியமொன்றை அரசாங்கம் உருவாக்குதல் வேண்டும்.** அத்தகைய நிதியை 5 ஆண்டுகளுக்கு நிருவகிப்பதற்கும் சட்டவிதிகளை உருவாக்கவும் குழு ஒன்று அமைக்கப்படவேண்டும். இந்த நிதி மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டங்களில் சமுதாயங்கள் பெறத்தக்கவகையில் பரவலாக்கப்படுதல் வேண்டும்.

5. **நல்லிணக்கம் மற்றும் நினைவுகூரலுக்கான மக்களின் உரிமை பற்றிய அரசின் நிலைப்பாட்டை சனாதிபதி அவர்கள் பொது மக்களுக்கு தெரியப்படுத்துமாறு நாம் பரிந்துரைக்கின்றோம்.** வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர் எந்தவொரு நினைவேந்தல்



குறிப்பு: தமிழ் மொழிப் பதிப்பானது, தகவல் நோக்கங்களுக்கு மாத்திரமேயான ஆங்கில மொழியிலுள்ள மூல ஆவணத்தின் மொழி பெயர்ப்பாகும். ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், ஆங்கில மூல உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

நடவடிக்கைகளையும் அனுமதிப்பதில்லை. பொதுமக்களின் நினைவேந்தல் முயற்சிகளை சீர்குலைக்க வேண்டாம் என்று இராணுவம் அறிவுறுத்தப்படுவது அவசியமானதாகும். வடக்கு, கிழக்கு மக்கள் நாட்டின் சரிநிகர் பிரசைகளாக வாழ்க்கையை அனுபவிப்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கத்தை எடுக்குமாறு நாம் பரிந்துரைக்கின்றோம்.

6. **மேற்கூறியவை நிறைவேற்றப்பட்டு ஐந்தாண்டு காலப்பகுதிக்குப் பின்னர், நாட்டின் அனைத்து மக்களும் ஆரோக்கியமான சமூக, நல்லிணக்கத்தில் ஒன்றாக உரிமை கோரக்கூடிய தேசிய நினைவுச்சின்னம் பற்றிய யோசனையை மீள்பரிசீலனை செய்ய முடியும்.**

**குறிப்பு:** *களப்பணி மற்றும் அறிக்கையைத் தயாரித்தலானது, பேராசிரியர் ஜகத் வீரசிங்க, பேராசிரியர் சந்திரகுப்தா தேனுவர, பேராசிரியர் தா.சனாதனன் மற்றும் பேராசிரியர் பர்சானா எப்.ஹனிபா ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டது.*

பேராசிரியர் ஜகத் வீரசிங்க(தலைவர்)

பேராசிரியர் சந்திரகுப்தா தேனுவர (உறுப்பினர்)

பேராசிரியர் தா.சனாதனன் (உறுப்பினர்)

பேராசிரியர் பர்சானா எப்.ஹனிபா (உறுப்பினர்)

து'ாரி சூரியாராச்சி (உறுப்பினர்)

மஹிந்த விதானாராச்சி (உறுப்பினர்)



குறிப்பு: தமிழ் மொழிப் பதிப்பானது, தகவல் நோக்கங்களுக்கு மாத்திரமேயான ஆங்கில மொழியிலுள்ள மூல ஆவணத்தின் மொழி பெயர்ப்பாகும். ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், ஆங்கில மூல உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.